மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01 ம் நாள் திங்கட்கிழமை

இ.மஎண்.01/2023
உள்
அசல் வழக்கு எண்.06/2023
––––––––

1) பத்மாவதி
2) ராஜலட்சுமி ... மனுதாரர்கள்/வாதிகள்
(மேற்படி 1 முதல் 2 வாதிகளின் அங்கீகாரம்
பெற்ற முகவர் என்.சுப்புராம் மூலம்)

/எதிர்/

1) குப்புசாமி
2) பிரபாகரன்
3) ரங்கசாமி
4) பெருமாள்சாமி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 12.01.2023 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 19.03.2024–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ராஜேஸ் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.அருணாசலம் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 3 விதி 2–ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், 19.12.2022 ம் தேதி தாக்கல் செய்திருக்கும் பவர் ஆப் அட்டார்னி பத்திரத்தை அங்கீகாரம் செய்து

மனுதாரர்கள்/வாதிகளுக்காக மனுதாரர்கள் உறவினரான என்.சுப்புராம் அவர்களை வழக்கை தொடர்ந்து நடத்த அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி 02.01.2023ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:–</u>**

இந்த வழக்கு 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்களின் வயோதிகத்தின் காரணமாகவும், படிப்பறிவு இல்லாத காரணத்தினாலும் நீதிமன்றத்தில் தொடர்ந்து ஆஜராக முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் வழக்கு பற்றிய முழு விபரங்களையும் நன்கு தெரிந்த மனுதாரர்களின் உறவினரான என்.சுப்புராம் அவர்கள் இவ்வழக்கில் மனுதாரர்களுக்காக தொடர்ந்து ஆஜராகவும், மனுதாரர்களுக்காக வாக்குமூலம் கொடுக்கவும் மனு தாக்கல் செய்வதற்கும் பதில் எதிர்உரை தாக்கல் செய்வதற்கும் மேல்முறையீடு நடத்துவதற்கும் இந்த வழக்கை சமரசமாக பேசுவதற்கும் வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்வதற்காகவும், தாவா வழக்கில் ஏற்படும் தீர்ப்பின் மீது மேல்நடவடிக்கை எடுக்கவும் நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்வதற்கும் மற்றும் அனைத்து நடவடிக்கைகளும் மனுதாரர்களுக்காக எடுப்பதற்கு மேற்படியாருக்கு பவர் ஆப் அட்டார்னி பத்திரம் மூலம் பொது அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, தாவா வழக்கை மனுதாரர்களின் உறவினர் என்.சுப்புராம் தொடர்ந்து நடத்த அனுமதி வழங்க உத்தரவிட வேண்டி அவசியமாக உள்ளது. இல்லாவிடில் ஏராளமான கஷ்ட, நஷ்டமும் பொருட்செலவும் ஆகும் என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **<u>2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்</u>**

மனுதாரர்கள் செய்துள்ள மனு அடிப்படையிலேயே தவறானதாகும். மனுவை மனுதாரர்கள் அவரது பவர் ஆப் அட்டார்னிக்காக தாக்கல் செய்ய இயலாது. வழக்கு நடத்துவதற்கு மனுதாரர்கள் யாருக்கும் பவர் ஆப் அட்டார்னி பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளாரோ அவரே முன் வந்து சத்தியப் பிரமாணத்தின் பேரில் நீதிமன்றத்தில்

மனு தாக்கல் செய்து அனுமதி பெற வேண்டுமே தவிர, பவர் ஆப் அட்டார்னிக்காக பவர் ஆப் அட்டார்னி எழுதிக் கொடுத்த மனுதாரர்கள் மனு செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல. மனுதாரர்களுக்கு உரிமையில்லாத சொத்தைப் பொறுத்து உறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்ய பவர் ஆப் அட்டார்னி பத்திரம் எழுதிக் கொடுத்திருப்பது ஒரு மோசடியாகும். யார் வழக்கில் தொடர்புடையவர்களாக இருக்கிறார்களோ அவர்களின் சாட்சியமே உண்மையானதாகவும், இயற்கையானதாகவும் அமையும். வேறு பவர் ஏஜெண்டுகளை நியமனம் செய்யும் பட்சத்தில் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட சாட்சியமாகவே அமையும். மனுதாரர்கள் இருப்பிடத்திற்கும், அவர்களின் பவர் ஆப் அட்டார்னி இருப்பிடத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. தாவா சொத்து பற்றியோ, உபயதரப்பினர் பற்றியோ ஏதும் அறியாதவர் ஆவார். அதனால் அவரது சாட்சியம் முழுமையான சாட்சியாக அமையானது. எனவே, மனுதாரர்கள் மனுவை 1, 2 எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7) **<u>தீர்வு</u>**:–

<u>Order 3 Rule2 CPC</u>

*Recognized Agents – The recognized agents of parties by whom such appearances, applications and acts may be made or done are -*

*a) Persons holding powers – of – attorney, authorizing then to make and do such appearances, applications and acts on behalf of such parties* என்று உள்ள நிலையில், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும்

ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் 19.12.2022 ம் தேதி தாக்கல் செய்திருக்கும் பவர் ஆப் அட்டார்னி பத்திரத்தை அங்கீகாரம் செய்து மனுதாரர்கள்/வாதிகளுக்காக மனுதாரர்கள் உறவினரான என்.சுப்புராம் அவர்களை வழக்கை தொடர்ந்து நடத்த அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி 02.01.2023 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. இந்த வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் என்.சுப்புராமுக்கு வழங்கப்பட்டுள்ள பொது அதிகார பத்திரமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் எதிருரையில் சொல்லப்பட்டுள்ள விபரங்களை வழக்கு விசாரணையின் போது மட்டுமே முடிவு செய்ய முடியும். எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, 19.12.2022 ம் தேதி தாக்கல் செய்திருக்கும் பவர் ஆப் அட்டார்னி பத்திரத்தை அங்கீகாரம் செய்து மனுதாரர்கள்/வாதிகளுக்காக மனுதாரர்கள் உறவினரான என்.சுப்புராம் அவர்களை வழக்கை தொடர்ந்து நடத்த அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி 02.01.2023 ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.